# இரண்டாம் பருவ பொது தொகுத்தறித் தேர்வு - 2024

## ஆறாம் வகுப்பு

*

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 2.00 மணி

மதிப்பெண்கள் : 60

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6 x 1 = 6

1. மாணவர்கள் நூல்களை ________ கற்க வேண்டும்.

அ) மேலோட்டமாக ஆ) மாசுற இ) மாசற ஈ) மயக்கமுற

2. நாம் ________ சொல்படி நடக்க வேண்டும்

அ) இளையோர் ஆ) ஊரார் இ) மூத்தோர் ஈ) வழிப்போக்கர்

3. பாட்டிசைத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பாட்டி+சைத்து ஆ) பாட்டி + இசைத்து இ) பாட்டு + இசைத்து ஈ) பாட்டு + சைத்து

4. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர்

அ) நுகர்வோர் ஆ) தொழிலாளி இ) முதலீட்டாளர் ஈ) நெசவாளி

5. போர்க்களத்தில் வெளிப்படும் குணம்

அ) மகிழ்ச்சி ஆ) துன்பம் இ) வீரம் ஈ) அழுகை

6. சேர்த்து எழுதுக. கலம் + ஏறி

அ) கலம்ஏறி ஆ) கலமறி இ) கலன்ஏறி ஈ) கலமேறி

**II. பொருத்துக.** 4 x 1 = 4

7. புயல் - நாடு
8. தேசம் - ஊஞ்சல்
9. மறம் - விளக்கு
10. விடிவெள்ளி - வீரம்

09-12-2024
E. சுரேஷ்
தேனி மாவட்டம்

**III. சொற்றொடரில் அமைத்து எழுதுக.** 2 x 1 = 2

11. ஏற்றுமதி
12. பண்பாடு

**IV. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5 x 2 = 10

13. சுட்டு எழுத்துகள் என்றால் என்ன?
14. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
15. கற்றவரின் பெருமைகளாக மூதுரை கூறுவன யாவை?
16. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
17. எப்படி உண்பது விரும்பத்தக்கது அன்று?
18. வணிகம் என்றால் என்ன?
19. மயங்கொலி எழுத்துகள் யாவை?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 3 x 4 = 12**

20. அகவினா, புறவினா - வேறுபாடு யாது?
21. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
22. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
23. காமராசரின் கல்விப் பணிகள் குறித்து எழுதுக.

**VI. அடி மாறாமல் எழுதுக. 4 + 2 = 6**

24. **"மன்னனும்"**......எனத் தொடங்கும் மூதுரை பாடல்.
25. **"உயர்வு"** என முடியும் திருக்குறள் எழுதுக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 2 = 10**

26. *இன எழுத்துகளை எடுத்து எழுதுக.*

அ) சங்கு ஆ) கற்கண்டு

27. *பத்தியைப் படித்து இரண்டு வினாக்கள் அமைக்க.*

முகிலன் பொங்கல் விழா கொண்டாடத் தாத்தா விட்டிற்கு சென்றான். அங்குச் செவலை என்ற காளை இருந்தது. அக்காளையை முகிலனுக்கு மிகவும் பிடிக்கும். அதற்குத் தீவனம் வைப்பது அவனது வழக்கம்.

28. *இரு பொருள் தருக.*

அ) நூல் ஆ) மாலை

29. *கலைச்சொல் எழுதுக.*

அ) Lift ஆ) Consumer

30. *மயங்கொலிப் பிழைகளை திருத்தி எழுதுக.*

அ) தேர்த் திருவிலாவிற்குச் செண்றனர்.

ஆ) வாலைப்பலம் உடளுக்கு மிகவும் நல்ளது.

**VIII. விடையளிக்க. 2 x 5 = 10**

31. அ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

32. அ) பிறந்தநாள் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதுக.

*(அல்லது)*

ஆ) காமராசர் என்னும் தலைப்பில் கீழ்காணும் குறிப்புகளை கொண்டு கட்டுரை எழுதுக.

முன்னுரை - இளமைக்காலம் - கல்விப்பணி - நிறைவேற்றிய பிற திட்டங்கள் - முடிவுரை.

******

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com